# IN THE COURT OF SUBORDINATE JUDGE, SANKARI

***OS.No.118/2008*** ***Date: 23.02.2026***

***DW1 –*** ராமசாமி

சாட்சி முன்னிலையானதின் பேரில் வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி:-

வாய்மொழி பாகப்பிரிவினையில் எந்தெந்த சர்வே எண்ணில், யார் யாருக்கு என்ன செக்குபந்திக்குள் பாகம் ஒதுக்கப்பட்டது என்று எனக்கு தெரியாது. 1983ல் வாய்மொழி பாகப்பிரிவினை ஏற்பட்டதாகத்தான் எதிர் வழக்குரையில் சொல்லியுள்ளேன் என்றால், சரிதான். ஆனால் 1985ம் ஆண்டு வாய்மொழி பாகப் பிரிவினை ஏற்பட்டதாகத் சொல்வதுதான் உண்மை. பி.வா.சா.3ல் 25 வருடங்களுக்கு முன்பே வாய்மொழி பாகப்பிரிவினை ஏற்பட்டதாக சொல்லியிருந்தால் அதுவும் உண்மைதான். பி.வா.சா.6ல் 1983ல் பாகம் ஏற்பட்டதாக சொல்லியிருந்தால் அதுவும் சரிதான். 4 முறை வாய்மொழி பாகப்பிரிவினை ஏற்பட்டதாக நான் சொல்வது பொய் என்றால், சரியல்ல. சர்வே எண் 90ல் பொதுவில் 1/8 பாகம் என்பது ஏக்கரில் 2.05 என்றால், சரிதான். எல்லா பாகஸ்தருக்கும் பொது பாதைக்கு நிலம் ஒதுக்கவேண்டும் என்றால், சரிதான். பி.வா.சா.3,4,6,7 ஆவணங்களில் பொதுப்பாதை காண்பிக்கப்படாமல் பொதுவில் 1/8 பாகமாக 2.06 ஏக்கர் நிலம் என்று குறிப்பிடப்பட்டு உள்ளது என்றால், சரிதான். என் மனைவிக்கு தற்போது வயது 71. 100 வருடங்களுக்கு முன்பு நடந்த எப்படி பாகம் பிரிக்கப்பட்டது என்று என் மனைவிக்கு நேரடியாக தெரியாது என்றால், சரிதான். நானும், மாரிமுத்து மகன் முருகேசன் கூட்டு சேர்ந்து கொண்டு மற்ற பாகஸ்தர்களை ஏமாற்றி விலை மதிப்புள்ள சமமான நிலங்களை கிழபுறம் உள்ள குடியிருப்பு பகுதிகளை ஒட்டியுள்ள நிலங்களுக்கு ஆவணங்களை ஏற்படுத்திக் கொண்டோம் என்றால், சரியல்ல. அங்கு வீடுகளே இல்லை. 1990ல் இல்லை தற்போது ½ கி.மீ. தூரத்தில் உள்ளது. நான் வீடுகள் இல்லையென்று வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால், சரியல்ல. மற்ற பாகஸ்தர்களுக்கு தெரியாமல் அவர்களை ஏமாற்றி நாங்கள் ஏற்படுத்திக் கொண்டுள்ள பி.வா.சா.ஆ,3,4,6,7 ஆவணங்கள் செல்லாது என்றால், சரியல்ல. அந்த ஆவணங்கள் எப்போதும் நடைமுறைக்கு வரவில்லையென்றாலும், அவைகள் வாதிகளை எவ்விதத்திலும் கட்டுப்படுத்தாது என்றாலும், சரியல்ல. தாவா சொத்துக்களில் இதுவரை யாரும் வீடு கட்டவில்லையென்றால், சரிதான்.

இதுவரை எல்லைக் கற்கள் நட்டு கம்பி வேலி அமைக்கவில்லையென்றால், சரிதான். ஆழ்துளை கிணறு அமைக்கப்படவில்லை என்றால், சரிதான். தனித்தனியாக உட்பிரிவு செய்து பட்டா பெயர் மாறுதல் செய்யப்படவில்லை என்றால், சரிதான். தாவா சொத்துக்கள் மானாவாரி நிலங்கள் என்றால், சரிதான். அதனால் அபிவிருத்தி செய்யப்படாமல் உள்ளது என்றால், சரியல்ல. நாங்கள் எங்கள் பாகத்தில் விவசாயம் செய்து வருகிறோம். நான் விவசாயம் செய்வதாக சொல்வது பொய் என்றால், சரியல்ல. நான் அதை காட்ட அடங்கல் கணக்கு தாக்கல் செய்யவில்லை என்றால், சரிதான். சர்வே எண் 83க்கு நாங்கள் எந்த ஆவணமும் ஏற்படுத்தவில்லையென்றால், சரிதான். பி.வா.சா.1 முதல் 12 ஆவணங்கள் எங்கள் வசம் இருந்து நாங்கள் வழக்கறிஞரிடம் ஒப்படைத்திருந்தோம். பி.வா.சா.1 முதல் 12 ஆவணங்கள் பற்றி நான் தாக்கல் செய்த 3 எதிர் வழக்குரையிலும் எதுவும் குறிப்பிடவில்லையென்றால், சரிதான். மேற்படி ஆவணங்கள்படி தாவா சொத்தை பொறுத்து நாங்கள் விளம்புகை பரிகாரம் கேட்டு தனியாக வழக்கு தாக்கல் செய்யவில்லையென்றால், சரிதான். அதுசம்பந்தமாக இந்த வழக்கில் எதிர் கோருரிமை கேட்கப்படாததற்கு காரணம், இந்த வழக்கு நிலுவையில் இருப்பதால் தாக்கல் செய்யவில்லை. பி.வா.சா.4 தேதியில் அந்த சொத்தில் எனக்கும், என் மனைவிக்கும் எவ்வித உரிமையும் இல்லையென்றால், சரியல்ல.

குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி வழக்கறிஞரின் வேண்டுகோளின்படி ஒத்தி வைக்கப்படுகிறது.

ஒப்பம்/-ராமசாமி

ஒப்பம்/- திரு.ந.பன்னீர்செல்வம்,
சார்பு நீதிபதி, சங்ககிரி.